


**05.02.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. பிரயாக்ராஜ் மகா கும்பமேளாவின் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியது பக்தி உணர்வை ஏற்படுத்தியதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

2. டெல்லி சட்டப்பேரவை தேர்தலில் பகல் 1 மணி நிலவரப்படி 33.31 சதவிகித வாக்குகள் பதிவாயின

3. ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தலில் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக இன்று நடைபெற்று வருகிறது.

4. சென்னையில் வடகிழக்கு வர்த்தக முதலீட்டு ஊக்குவிப்பு பேரணியை, மத்திய அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா இன்றுமாலை துவக்கி வைக்கிறார்.

5. சென்னை ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன், சாஹித் மைனேனி இணை இன்று களமிறங்குகிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

உத்தரபிரதேச மாநிலம் பிரயாக்ராஜில், மகா கும்பமேளாவின் திரிவேணி சங்கமத்தில் பிரதமர் திரு.நரேந்திர மோடி இன்று புனித நீராடினார்.

திரிவேணி சங்கமத்தில் புனித நீராடியது தெய்வீக பக்தி உணர்வை ஏற்படுத்தியதாக பிரதமர் தமது சமூக வலைதளப் பதிவில் கூறியுள்ளார்.

நாட்டு மக்கள் இறையருளுடன் அமைதியுடனும், அறிவாற்றலுடனும், ஆரோக்கியத்துடனும், ஒற்றுமை உணர்வுடனும் வாழ பிரதமர் வாழ்த்தியுள்ளார்.

முன்னதாக பிரதமர், படகு வாயிலாக கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகள் சங்கமிக்கும் திரிவேணி சங்கமத்திற்கு சென்றடைந்து சிறப்பு பூஜைகளை மேற்கொண்டார்.

நாட்டின் ஆன்மீக மற்றும் கலாச்சார பாரம்பரியத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில் பிரதமர் தொடர்ந்து புனித தலங்களில் ஆக்கப்பூர்வமான கட்டமைப்பு நடவடிக்கைகளையும் சிறப்பு வசதிகளையும் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் பிரயாக்ராஜில் 5 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டமைப்புகள், அடிப்படை வசதிகள், இணைப்புகளை உள்ளடக்கிய 167 மேம்பாட்டு பணிகளை பிரதமர் துவக்கிவைத்தது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

<u>தேர்தல்</u>

டெல்லியில் 70 சட்டப்பேரவை தொகுதிகளில் வாக்குப்பதிவு தற்போது அமைதியாக நடைபெற்று வருகிறது.

காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை தொடர்ந்து நடைபெறும்.

பகல் 1 மணி நிலவரப்படி டெல்லியில் 33.31 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன.

குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்மு,

குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர்,

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா,

மத்திய அமைச்சர்கள், டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், திரு. ஹர்தீப் சிங் பூரி,

மூத்த காங்கிரஸ் தலைவர் திரு. ராகுல்காந்தி

டெல்லி முதலமைச்சர் அதிஷி உள்ளிட்டோர் காலையிலேயே தங்களது வாக்குகளை செலுத்தினர்.

முன்னதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி வாக்காளர்கள் அனைவரும் வாக்களித்து தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்.

இதனிடையே புதுதில்லியில் செய்தியாளர்கிளடம் பேசிய தலைமை தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார், டெல்லி சட்டப்பேரவை தேர்தல் அமைதியான முறையில் நடைபெறுவதாகவும், இப்பணியில் ஈடுபட்டுள்ள அனைத்து தேர்தல் பணியாளர்களை பாராட்டுவதாகவும் கூறினார்.

டெல்லி சட்டப்பேரவை தேர்தலில் 699 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

❖❖❖❖❖❖

<u>ஈரோடு கிழக்கு</u>

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதியில் இடைத்தேர்தல் வாக்குப்பதிவில் பகல் 1 மணி நிலவரப்படி 42.41 சதவிகித வாக்குகள் பதிவாகியுள்ளன.

திமுக சார்பில் வி.சி. சந்திரகுமார்,

நாம் தமிழர் கட்சி சார்பில் சீத்தாலட்சுமி

31 சுயேட்சை வேட்பாளர்கள் உட்பட 46 பேர் களத்தில் உள்ளனர்.

பி.ஜே.பி., அஇஅதிமுக, தேமுதிக உள்ளிட்ட கட்சிகள், இடைத் தேர்தலில் போட்டியிடவில்லை.

இந்த இடைத்தேர்தலுக்காக 237 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

இடைத்தேர்தல் பணியில் ஆயிரத்து 195 தேர்தல் அலுவலர்களும், பாதுகாப்பு பணியில் 2 ஆயிரத்து 675 காவலர்களும் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளர்கள் இவர்களின் வெற்றியை நிர்ணயிக்க உள்ளனர்

மாவட்ட ஆட்சித்தலைவரும், தேர்தல் நடத்தும் அலுவலருமான திரு. ராஜகோபால் சுன்கரா, சம்பத் நகரில் தமது வாக்கை பதிவுசெய்தார்.

காங்கிரஸ் கட்சியின் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மறைவை அடுத்து அங்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

உத்தரபிரதேச மாநிலம் மில்கிபூர் சட்டப்பேரவை தொகுதியிலும் இன்று இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

பகல் 1 மணி நிலவரப்படி 44.59 சதவிகித வாக்குகள் பதிவாயின.

டெல்லி சட்டப்பேரவை தேர்தல் மற்றும் இடைத்தேர்தல்களில் பதிவாகும் வாக்குகள் வரும் சனிக்கிழமை எண்ணப்படுகின்றன.

❖❖❖❖❖❖

<u>சிவ்ராஜ்சிங் சவுஹான்</u>

நாட்டில் நீர்நிலை மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு மக்கள் தொடர்பு இயக்கத்தை மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவுஹான் புதுதில்லியில் காணொலி மூலம் இன்று துவக்கிவைத்தார்.

இவ்வியக்கத்தின் மூலம் 26 மாநிலங்கள், 2 யூனியன் பிரதேசங்களில் உள்ள 6 ஆயிரத்து 673 பஞ்சாயத்துகளில் நீர்பாதுகாப்பு, மண்சரிவு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

❖❖❖❖❖❖

<u>துணைவேந்தர்கள் மாநாடு</u>

துணைவேந்தர்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் நியமனம் தொடர்பாக பல்கலைக்கழக மானியக்குழுவின் வரைவு நெறிமுறைகள் குறித்து விவாதிப்பதற்காக 7 மாநிலங்களின் உயர்கல்வி அமைச்சர்கள் பங்கேற்றுள்ள ஒருநாள் மாநாடு பெங்களூருவில் இன்று நடைபெறுகிறது

தமிழகத்தின் சார்பில் உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோ.வி.செழியன் இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளார்.

கேரளம், கர்நாடகம், தெலங்கானா, ஹிமாச்சல பிரதேசம், ஜார்கண்ட் மாநிலங்கள் மற்றும் ஜம்முகாஷ்மீர் யூனியன் பிரதேசத்தை சேர்ந்த உயர்கல்வி அமைச்சர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖

<u>ரிசர்வ் வங்கி</u>

ரிசர்வ் வங்கி நிதிக்கொள்கை குழு கூட்டம் இன்று தொடங்கியது.

வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் வட்டி விகித மாற்றங்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

திரு.மல்ஹோத்ரா ரிசர்வ் வங்கி ஆளுநராக பதிவியேற்ற பின்னர் நடைபெறும் முதல் கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

<u>ஜோதிர் ஆதித்ய சிந்தியா</u>

வடகிழக்கு வர்த்தக முதலீட்டு ஊக்குவிப்பு பேரணியை, வடகிழக்கு பிராந்திய மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்ய சிந்தியா இன்று சென்னையில் துவக்கி வைக்கிறார்.

இவ்வகையில் எட்டாவதாக நடைபெறும் இந்த பேரணியில் மணிப்பூர் மேகாலயா மிசோரம் உள்ளிட்ட 8 வடகிழக்கு மாநிலங்களின் கைவினை பொருட்கள் மற்றும் கலை அம்சங்களின் காட்சியமைப்புகள் இடம்பெறுகின்றன.

வேளாண்மை, உணவு பதப்படுத்துதல், தகவல் தொழில்நுட்பம், பொழுதுபோக்கு, விளையாட்டு, எரிசக்தி, சுற்றுலா, மருத்துவம் உள்ளிட்ட துறைகளில் வடகிழக்கு மாநிலங்களில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்தும் இதில் எடுத்துரைக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖

<u>முதலமைச்சர்</u>

திருநெல்வேலி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் நாளை துவக்கி வைக்கிறார்.

கங்கைகொண்டானில் 4 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான சூரிய மின்சக்தி தொழிற்சாலையை திறந்து வைக்கும் முதலமைச்சர்,

நாளை மறுநாள் 40 ஆயிரம் பயனாளிகளுக்கு வீட்டுமனை பட்டாக்களையும்,

20 ஆயிரத்து 200 பேருக்கு நலத்திட்ட உதவிகளையும் முதலமைச்சர் வழங்குகிறார்.

❖❖❖❖❖❖

<u>ரகுபதி</u>

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அரசு மருத்துவமனையில் 24 மணிநேர மின் விநியோகத்தை உறுதிசெய்யும் வகையில், 11 கிலோவாட் மின்திறன் கொண்ட மின்மாற்றி செயல்பாட்டை மாநில சட்டத்துறை அமைச்சர் திரு. ரகுபதி இன்று துவக்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், திருப்பரங்குன்றம் பிரச்சனையில் சுமூகமுடிவு எட்டப்படும் என்றார்.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர் நியமனம் தொடர்பாக நீதிமன்றம் நல்ல தீர்ப்பு வழங்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

❖❖❖❖❖❖

<u>காந்தி</u>

தமிழகத்தில் கல்விக்காக அரசு பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருவதாக மாநில கைத்தறி துணிநூல் துறை அமைச்சர் திரு.காந்தி தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜா அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற ஆண்டுவிழாவில் பங்கேற்று பேசியஅவர், மாணாக்கர் அரசு செயல்படுத்தும் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖

<u>சிவசங்கர்</u>

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை ஒன்றியம் எரையூர் அரசு உதவிபெறும் மேல்நிலைப்பள்ளியில் மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு. சிவசங்கர், 10, 11, 12-ம் வகுப்பு மாணாக்கருக்கான தேர்வு வழிகாட்டி தொகுப்புகளை இன்று வழங்கினார்.

❖❖❖❖❖❖

<u>யானை வாய்ஸ்</u>

கோவை, நீலகிரி வனப்பகுதிகளில் சுற்றுலா செல்வோர், வனத்துறையின் அறிவிப்புகளை பின்பற்ற வனத்துறை அறிவுறுத்தியுள்ளது

வனவிலங்குகள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் பாதுகாப்பாக இருக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளது.

கோவை பொள்ளாச்சியை அடுத்த வால்பாறையில் ஜெர்மன் நாட்டை சேர்ந்த சுற்றுலா பயணி யானை தாக்கி இன்று உயிரிழந்ததையடுத்து வனத்துறை இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

<u>கோவில்</u>

பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி திருக்கோவிலில் தைபூச திருவிழா இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

**இரங்கல்**

புதுதில்லி ஆகாஷவாணியில் பணியாற்றி ஓய்வுபெற்ற முதுபெறும் தமிழ் செய்தி வாசிப்பாளர் ஆர்.எஸ். வெங்கட்ராமன், சென்னையில் நேற்று காலமானார்.

அவருக்கு வயது 102.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் தேதி நாடு சுதந்திரம் பெற்றதை கிழக்காசிய ஒலிபரப்பு செய்திகளுக்காக தமிழ்மொழியில் தமது குரலில் முதலில் வாசித்த பெருமைக்கும், சிறப்புக்கும் உரியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

டெல்லி ஆகாஷவாணியில் 64 ஆண்டுகள், வெங்கட்ராமன் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று சென்னையில் நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

சென்னை ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன், சாஹித் மைனேனி இணை - பெல்ஜியத்தின் கிம்மர் கோப்ஜான், துருக்கியின் எர்கி இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖